# THE INVOLVEMENT OF PRIVATE BUSINESSMEN IN THE PRODUCTION AND MARKETING OF PADDY AND ITS IMPACTS (WITH THE SPECIAL REFERENCE TO ERAVUR PATTU DS`s DI VISION)

MISS. SASIKALA SINNATHURAI

FCM538
Project Report
Library - EUSL

DEPARTMENT OF ECONOMICS
FACULTY OF COMMERCE & MANAGEMENT
EASTERN UNIVERSITY,
SRI LANKA.

2002

# ஆய்வுச் சுருக்கம்

இலங்கை இன்று கைத்தொழில் மயமாக்கலை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தாலும், விவசாயத்துறையை முற்றாகப் புறக்கணித்துவிட முடியாது. ஏனெனில் பண்டைக் காலம் தொட்டு இலங்கையின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாகத் திகழும் விவசாயத்துறை கிராம மக்களில் 75%ஆனவர்களின்; வேலைவாய்ப்பு, வருமானம், வாழ்க்கைத்தரம் என்பவற்றை நிர்ணயிக்கின்ற துறையாக விளங்குகின்ற அதேவேளை இந்நாட்டு மக்களின் பிரதான உணவு நெல்லரிசிச் சோறு என்பதாலும். எனவேதான் இலங்கையின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாகத் திகழும் விவசாயத் துறையை விருத்தியடையச் செய்யும் வகையில் காலத்திற்குக் காலம் பதவியேற்கும் அரசாங்கங்கள் சில கொள்கைகளையும், திட்டங்களையும் அமுல்படுத்தி வருகின்றன.

விவசாயத்துறையில் பெரும் பங்குவகிப்பது நெற்பயிர்ச் செய்கையாகும். கிராம மக்களின் பிரதான வருவாய் மூலமான நெற் செய்கையை அதிகரிப்பதன் மூலம், அவர்களது வருமானம், வாழ்க்கைத்தரம் என்பவற்றை உயர்த்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை அரசாங்கம் அடைந்து கொள்ளும் வகையில் நெல் உற்பத்தி, சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் சில கொள்கைகளையும், திட்டங்களையும் அமுல்படுத்தி வருகிறது. அத்தகைய கொள்கைகள், திட்டங்களின் ஓர் அம்சமாக தனியார் துறையினரையும் இத்தகைய நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபடுத்தியது. அவ்வாறு ஈடுபடுத்தப்பட்ட தனியார்த் துறையினர் இன்று இத்தகைய நடவடிக்கைகளில் பெரும் பங்கு வகிக்கின்றனர். இவர்களது தலையீட்டிற்கு ஏறாவூர் பற்றுப் பிரதேச செயலகப் பிரிவும் விதிவிலக்கானதல்ல. இதற்குக் காரணம்; இது தொடர்பான நிறுவனரீதியான அமைப்புக்கள் சிறப்பான முறையில் செயற்படாமையாகும்.

மேலும் இப்பிரதேசத்தில் 85%ஆன விவசாயக் குடும்பங்கள் சொந்த முதல் இன்றி நெல் உற்பத்தியை மேற்கொள்பவர்களாதால் தனியார் வர்த்தகர்கள் இன்றி உற்பத்தியை மேற்கொள்ள முடியுமா? என்பது கேள்விக்குறி. அத்துடன் தனியார் வர்த்தகர்களின் தலையீட்டால் நெல் உற்பத்தியாளர்கள் சுரண்டப்படுகிறார்கள் என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. எனவேதான் நெல் உற்பத்தி, சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் தனியார் வர்தகர்களது தலையீட்டால் நெல் உற்பத்தியாளர்கள் எதிர் கொள்ளும் சாதக, பாதகங்களைக் கண்டறியும் வகையில் ''நெல் உற்பத்தி, சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் தனியார் வர்த்தகர்களின் தலையீடும், அதன் விளைவுகளும்'' என்னும் ஆய்வு மூலம் முயற்சிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய முதலாவது அத்தியாயம் ஆய்வு முன்மொழிவாக அமைந்துள்ளது. இதில் அறிமுகம், ஆய்வுப் பிரச்சினை, ஆய்வின் நோக்கம், ஆய்வு செய்யும் முறை, ஆய்வின் எடுகோள்கள், ஆய்வின் வரையறைகள் மற்றும் கருதுகோளாக்கம், எண்ணக்கருவாக்கம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

அத்தியாயம் இரண்டில் நூலாய்வு செய்யப்பட்டுள்ளது. இதில் உற்பத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் நிதி, விலை தொடர்பான விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் மூன்றில் ஆய்வுப் பிரதேசம் தொடர்பான விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. இதில் பிரதேசத்தின் அமைவிடம், பிரதேசத்தின் பௌதீக அம்சங்கள், பிரதேசத்தின் அரசியல், சமூகப், பொருளாதார நிலை மற்றும் நிலப்பயன்பாடு, நீர்ப்பாசனம், நிலவுடைமை, என்பவற்றுடன் பிரதேசத்தின் நெற் செய்கை, நெற் செய்கைக்கு உதவி புரியும் நிறுவனங்கள்/அமைப்புக்கள் தொடர்பான விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் நான்கில் வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் பெறப்பட்ட தரவுகள் முன்வைக்கப்பட்டு விரிவாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

ஐந்தாவதும், இறுதியுமான அத்தியாயத்தில் ஆய்வை மேற்கொண்ட பொழுது பெறப்பட்ட முடிவுகளும், அதற்கான விதந்துரைப்புக்களும், ஆலோசனைகளும் எடுத்தியம்பப்பட்டுள்ளது.

நன்றி

ஆய்வாளன்

# பொருளடக்கம்


| அத்தியாயம் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | i |
| நன்றியுரை | iii |
| பொருளடக்கம் | iv |
| அட்டவணைப்பட்டியல் | vii |
| விளக்கப்பட விபரம் | viii |
| அத்தியாயம் 01 | |
| ஆய்வு அறிமுகம் | 1-10 |
| 1.1 அறிமுகம் | 1 |
| 1.2 ஆய்வுப் பிரச்சினை | 5 |
| 1.3 ஆய்வின் நோக்கம் | 6 |
| 1.4 ஆய்வு செய்யும் முறை | 6 |
| 1.5 ஆய்வின் எடுகோள்கள் | 8 |
| 1.6 ஆய்வின் வரையறைகள் | 8 |
| 1.7 எண்ணக்கருவாக்கம் | 9 |
| அத்தியாயம் - 02 | 11-44 |
| நூலாய்வு | |
| 2.1 உற்பத்தி | 11 |
| 2.2 சந்தைப்படுத்தல் | 24 |
| 2.3 சந்தைப்படுத்தல் கலவை | 27 |
| 2.4 சந்தைப்படுத்தல் தந்திரோபாயம் | 29 |

2.5 நிதி 31

2.6 விலை 34

2.7 நெல் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் 36

2.8 அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் விவசாய உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் நிலவும் பிரச்சினைகள் 40

அத்தியாயம் 03 45-66

ஆய்வுப் பிரதேசம்

3.1 பிரதேசத்தின் அமைவிடம் 45

3.2 பிரதேசத்தின் பௌதீக அம்சங்கள் 45

-தரைத் தோற்றம் 45

-காலநிலை 46

-மண்வளம் 49

3.3 பிரதேசத்தின் அரசியல், சமூகப், பொருளாதார நிலை 49

-அரசியல் நிலை 49

-பொருளாதார நிலை 49

-சனத்தொகை 51

-வருமானம் 52

-கல்வி 53

-வேலைவாய்ப்பு 54

3.4 நிலப்பயன்பாடு 55

3.5 நீர்ப்பாசனம் 58

3.6 நிலவுடைமை 60

3.7 பிரதேசத்தின் நெற்செய்கை 61

3.8 பிரதேசத்தின் விவசாயத்திற்கு உதவிபுரியும்

அத்தியாயம் 04 67-93

தரவு முன்வைப்பும், பகுப்பாய்வும்

4.1 அறிமுகம் 67

4.2 உற்பத்தி தொடர்பான விடயங்கள் 67

4.3 தனியார் வர்த்தகர்கள் 77

4.4 சந்தைப்படுத்தல் தொடர்பான விபரங்கள் 77

4.5 நிறுவனங்கள் 87

4.6 வருமானமும், செலவும் 90

அத்தியாயம் 05 94-107

முடிவுகளும், விதந்துரைப்புக்களும், ஆலோசனைகளும்.

5.1 அறிமுகம் 94

5.2 முடிவுகள் 94

5.2.1 உற்பத்தி தொடர்பாகப் பெறப்பட்ட முடிவுகள் 95

5.2.2 சந்தைப்படுத்தல் தொடர்பாகப் பெறப்பட்ட முடிவுகள் 98

5.3 விதந்துரைப்புக்களும், ஆலோசனைகளும் 100

5.3.1 உற்பத்தி தொடர்பாகப் பெறப்பட்ட முடிவுகளுக்கான விதந்துரைப்புக்களும், ஆலோசனைகளும் 100

5.3.2 சந்தைப்படுத்தல் தொடர்பாகப் பெறப்பட்ட முடிவுகளுக்கான விதந்துரைப்புக்களும், ஆலோசனைகளும் 103

முடிவுரை 108

உசாத்துணை 109 -110

பின்னிணைப்பு1 111 -115